OS 203/2017

வா.சா. 1 திருநீலகண்டன் த/பெ நடராஜன்

நாள் 14.03.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

21. நான் இதற்கு முன்பு சாட்சியம் அளித்த போது 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை ஆஜர் படுத்துவதாக சொல்லியிருந்தேன் என்றும் அவ்வாறு அந்த ஆவணத்தை எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் தான் நான் மேற்சொன்ன ஆவணம் என்றால் சரிதான். 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

22. பி.வா.சா.ஆ2 கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்தொகையான ரூ.3,00,000/- செப்பி தான் தாவா அடமானம் பத்திரம் தொகை குறிப்பிடப்பட்டு ரூ.3,50,000/- பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் 01.09.2014 தேதியிட்ட வில்லங்கச்சான்று மேற்சொன்ன 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தம் மற்றும் 11.12.2009 தேதியிட்ட அடமான கடன் பத்திரம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 01.09.2014 தேதியிட்ட வில்லங்கச்சான்று **பி.வா.சா.ஆ3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

23. தாவா அடமானக்கடன் பத்திரத்தில் சாட்சிகளாக சீனிவாசன் மற்றும் அரசு ஆகியோர் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு தாவா அடமானக்கடன் பத்திர சாட்சிகளை என் தரப்பில் விசாரிக்க உள்ளேனா என்றால் சாட்சிகள் யாரும் நான் அழைத்தால் வரமாட்டார்கள். சாட்சிகள் பிரதிவாதி தரப்பை சார்ந்தவர்கள் ஆவார்கள். தாவா அடமானக் கடன் பத்திரப்படி அடமான கடன் தொகையை நான் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் தான் அடமானப்பத்திரம் சாட்சிகளை என்னால் விசாரிக்க முடியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

24. தாவா அடமானக்கடன் குறித்த விவரத்தை என் வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தப்படி மீதி கிரையத்தொகையை பெற்றுக்கொண்டு பிரதிவாதி கிரையப்பத்திரம் பதிவு செய்து கொடுக்க தயாராக இருந்தார் என்றும் ஆனால் நான் தான் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றும் அதனால் தான் அந்த கிரைய ஒப்பந்தத்தின் படி கிரையப்பத்திரம் பதிவு செய்யப்படாமல் நின்றுவிட்டது என்றால் சரியல்ல.

25. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முன்தொகை ரூ.3,00,000/- ஆனது 6 காசோலைகளாக கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றும் தாவா அடமானக்கடன் பத்திரத்தின்படி உண்மையிலேயே அடமானக்கடன் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டு இருந்தால் அதேபோல் அடமானத்தொகை எவ்வாறு என்ன முறையில் கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிட்டு சொல்லப்பட்டிருக்கும் என்றும் அவ்வாறு எந்த குறிப்பும் இல்லாததால் அடமானக் கடன் பத்திரப்படி கடன் தொகை எதுவும் பிரதிவாதிக்கு நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அடமானக்கடன் தொகையை நேரடியாக ரொக்கமாக கொடுத்தேன்.

26. 10.01.2007 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தை நான் ரத்து செய்து கொடுக்காததற்கு காரணம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் தான் என்றும் அதனால் தாவா அடமானக்கடன் பத்திரம் பிரதிவாதியால் பொறுப்புக்காகத்தான் எழுதி கொடுக்கப்பட்டது என்றும் அந்த அடமானக்கடன் பத்திரத்திற்கு நான் எந்தவொரு தொகையும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிபலன் அற்ற அடமானக் கடன் பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.